# நவி மும்பை தமிழ்ச் சங்கம்
# NAVI MUMBAI TAMIL SANGAM

(Regd.No. MAH-840 Thane & F-777 Thane)
Plot No. 2/C-1, Sector 9A, Vashi, Navi Mumbai - 400 703.
E-mail : nmtamilsangam@yahoo.in • Mob.: 88500 48203

## *2023-24 ஆம் நிதி ஆண்டுக்கான நிர்வாகக் குழு ஆண்டறிக்கை*

**பெருமதிப்பிற்குரிய அங்கத்தினர்களுக்கு, வணக்கம்.**

*நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் 2022-23ஆம் நிதியாண்டுக்கான நிர்வாகக் குழு ஆண்டறிக்கையை அங்கத்தினர்களுக்கு இவண் தொகுத்து வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகிறோம்.*

*2023-24 ஆம் நிதியாண்டில் 1-4-23 முதல் 27-8-23 வரை முந்தைய நிர்வாகக் குழுவும், தேர்தலுக்குப் பின் தற்போதுள்ள புதிய நிர்வாகக் குழுவும் செயல்பாடுகளையும் நிகழ்வுகளையும் மேற்கொண்டன. .அவற்றை உறுப்பினர்களின் மேலான கவனத்திற்காக இவண் தொகுத்து வழங்குகிறோம்.*

***<u>இரங்கல்</u>**:- நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரான திரு. ராமநாராயணன் (ஆ.உ.எ.196) அவர்கள் இறைவனடி சேர்ந்தார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் பதிவு செய்கிறோம். அன்னாரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*கடந்த ஆண்டில் அங்கத்தினர் எண்ணிக்கை. 898 ஆக இருந்தது நிர்வாகக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தினர்களுக்குப் பொதுக்குழு அங்கீகாரம் வழங்கிய பின்னர் நம்து சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 918- ஆகும்.*

*கடந்த நிதியாண்டில் நிர்வாகக் குழுக்கள் 16-மாதாந்திரக் கூட்டங்களை நடத்தியுள்ளன. இவற்றுள் முந்தைய குழு 1-4-22 முதல் 31-8-23 வரை ஆறு கூட்டங்களையும் தற்போதைய குழு 1-9-23 முதல் 31-3-24 வரை 10 கூட்டங்களையும் நடத்தியுள்ளன. 2023-24ஆம் ஆண்டில் நிர்வாகக் குழு நடத்திய நிகழ்வுகளின் தொகுப்பு அறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ளது.*

*காலக்சி பவுண்டேஷன் நடத்திய சிறுகதைப் போட்டியில் நமது சங்க உறுப்பினர் திருமதி பிரசன்னா வெங்கடேஷ் (ஆ.உ.எ. 724) எழுதிய சிறுகதைக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. நமது சங்கத்தின் மிருதங்க குருவானா திரு. எம். ஏஸ். பரமேஸ்வரன் அவர்களுக்கு. ஆர்ட் ஆஃப் லிவிங் பவுண்டேஷன் 'கலா சாரதி ' விருது வழங்கி கௌரவித்தது. சங்கத்தின் சார்பில் விருது பெற்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*நமது சங்கத்தின் ஆசிரியைகளான திருமதி பேபிராணி, திருமதி கனகவல்லி, திருமதி மகாலட்கமி, ரகுநாத், திருமதி மாதுரி ராமநாதன்,திரு. நிதின் கைக்வாட் குரு திரு, எம்.எஸ் பரமேஸ்வரன் அவர்களுக்கும் ஜி.வி. .ரமணி நாட்டிய கலா பவுண்டேஷனின் குரு திருமதி காயத்ரி சுப்ரமணியன் அவர்களுக்கும் சங்கத்தின் மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறோம்.*

*சங்கத்தின் நூலக சீரமைப்புக்குத் தங்கள் பொன்னான நேரத்தைச் செலவிட்டு உதவிய நமது சங்க நூலகர் திருமதி சாவித்திரி ரவிசங்கர் அவர்கள் ஆ.உ.எ.312), உறுப்பினர் திருமதி பிரசன்னா வெங்கடேஷ் அவர்கள் (ஆ.உ.எ. 724), உறுப்பினர் திருமதி புஷ்பா மகாதேவன் அவர்கள் (ஆ.உ.எ. 788) நமது சங்கத்தின் நலம் விரும்பிகளும் சங்க உறுப்பினர்களது மனைவிகளான திருமதி கீதா நீலகண்டன் மற்றும், திருமதி பாமா மூர்த்தி ஆகியோருக்கு சங்கத்தின் மனமார்ந்த நன்றியை இவண் பதிவு செய்கிறோம்.*

*சங்கத்தின் தணிக்கையாளர் நிறுவனமான பி. சங்கர் & கோ வுக்கும் நமது வங்கிகளான பஞ்சாப் நேஷனல் பாங்க், அபுதயா பாங்க் ஆகியவற்றுக்கும் சங்கத்தின் நன்றியைப் பதிவு செய்கிறோம். அச்சக வேலைகளில் பெரும் பங்களிப்பு வழங்கிவரும் பர்ஃபெக்ட் பிரின்டிங் நிறுவனத்திற்கும் சங்கத்தின் மன்மார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறோம்.*

*சங்கத்தின் கல்விப் பணிகளுக்கு தொடர்ந்து ஆதரவு நல்கி வரும் பள்ளிகளுக்கு சங்கத்தின் மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறோம்.*

சங்கத்தின் உணவு உபசரிப்பாளர்கள் ,அலங்கரிப்பு செய்து உதவுபவர்கள், ஒலி ஒளி அமைப்பு நல்குபவர்கள், தினகரன், தினத்தந்தி, ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் இணைய ஊடகங்களான தமிழ் அறம்,நியூஸ் பாண்டு ஆகியவற்றுக்கும் சங்கத்தின் மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறோம்.

| வ. எண் | தேதி | நிகழ்வு | குறிப்பு |
|---|---|---|---|
| *1.* | *14-4-23* | தமிழ் புத்தாண்டு தினக் கொண்டாட்டம் | நன்கொடையாளர்கள் திரு. முத்து அவர்கள் *(ஆ.உ.எ 756)*, திரு பைரவ சுப்ரமணியன் அவர்கள் *(ஆ.உ.எ. 787)* இந்த நிகழ்வுக்கு உதவினார்கள். |
| *2.* | *10-6-23* | கவியரசு கண்ணதாசன் அவர்கள் பிறந்த தின விழாக் கொண்டாட்டம் (பாட்டுப் பாட வா திரை இசை நிகழ்ச்சி) | கவியரசு கண்ணதாசன் தமிழ்ப் பேரவை யின் நன்கொடை மற்றும் சன் ஷைன் இசைக் குழுவின் பங்கேற்புடன் இந்த இசை நிகழ்ச்சி நடைபெற்றது. |
| *3.* | *19-6-23* | மராத்திய மாநிலப் பள்ளிகளுக்கு தமிழ்ப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வினியோகிக்கப் பட்டன. இந்தச் சேவையை கடந்த ஒன்பது ஆண்டுகளாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். | நமது சங்கம் மராத்திய மாநிலப் பள்ளிகளுடன் ஒருங்கிணைப்பு செய்து பள்ளிகளின் புத்தகத் தேவையைத் தெரிந்து கொண்டது. பின்னர் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்விசேவை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து *3* லட்சம் ரூபாய் மதிப்புள்ள தமிழ்ப் பாடப் புத்தகங்களை நன்கொடையாகப் பெற்றது. பின்னர் இந்தப் புத்தகங்கள் சங்கத்தின் செலவில் நவி மும்பைக்குக் கொண்டுவரப்பட்டு பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. |
| *4.* | *8-7-23* | சங்கத்தின் தமிழ், கர்நாடக இசை, மிருதங்கம், மராத்தி வகுப்புகள் புனரமைப்புக்குப் பிறகு மறுபடியும் தொடங்கின. | சங்கத்தின் மாணவ மாணவியர் மிகவும் உற்சாகத்துடன் வகுப்புகளில் பங்கேற்றார்கள். |
| *5.* | *6-8-23* | தமிழ் இணையக் கல்விக் கழகத் தேர்வுகள் | தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற தொடர்பு மையமான நம் சங்கத்தில்நடைபெற்ற சான்றிதழ் தேர்வுகளில் *38* மாணவர்கள் பங்கேற்றார்கள். |
| *6.* | *15-8-23* | சுதந்திரதினக் கொடியேற்றுதல் | சங்க வளாகத்தில் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்புடன் நிர்வாகக் குழுத் தலைவர் திரு. எஸ். ஏகாம்பரம் ஐயா அவர்கள் அவர்கள் கொடியேற்றினார். |
| *7.* | *23-8-23* | புனரமைப்பு செய்யப்பட்ட நவிமும்பை தமிழ்ச் சங்கக் கட்டடத்தை தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ம. பா. சாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார். | உறுப்பினர்களும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். |
| *8* | *27-8-23* | அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. | தேர்தல் ஆணையர் திரு. எச். சுப்ரமணியன் அவர்கள் *(ஆ.உ.எ.581)*, தேர்தல் பொறுப்பு அதிகாரிகள் திரு.பி.பாலசுப்ரமணியன் அவர்கள் *(ஆ.உ. 320)*, திரு. ஆர். ஜெயராமன் அவர்கள் *(ஆ.உ.எ.131)* தேர்தல்களை மிகவும் சிறப்பாகத் நிர்வகித்து நடத்தினார்கள். |

| வ. எண் | தேதி | நிகழ்வு | குறிப்பு |
|---|---|---|---|
| 9 . | 1-10-23 | கலைஞர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்பு.<br><br>இந்த விழாவில் நமது நவி மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு **'சிறந்த தமிழ்ச் சங்கத்திற்கான விருது** வழங்கப்பட்டது. | தமிழ்நாடு போக்குவரத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். எஸ். சிவசங்கர் அவர்கள் இந்த விருதை வழங்கினார். |
| | 24-10-23 | விஜயதசமி வித்யாரம்ப விழா | சங்க வளாகத்தில் தமிழ் வகுப்பு, மராத்தி வகுப்பு, மிருதங்க வகுப்பு, பரதநாட்டிய வகுப்பு, கராத்தே வகுப்பு ஆகியவற்றுக்குப் புதிய மாணவர் சேர்க்கை நடைபெற்றது. |
| 10. | 28-10-23 | பாரதரத்னா முனைவர் திரு. அப்துல் கலாம் ஐயா அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம். 'இளைஞர் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சியாக கொண்டாடப்பட்டது. | இந்த நிகழ்ச்சிக்கு விஞ்ஞானி திரு. ஜி.கௌதமன் அவர்கள் தலைமை தாங்கினார். பத்திரிகையாளர் திரு.லட்சுமணன் சுந்தர் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார், |
| 11 | 25-11-23 | தீபாவளி நகைச்சுவைப் பட்டி மன்றம் | இதில் நகைச்சுவை மன்ற நிறுவனர் திரு.அண்ணாச்சி ஆறுமுக பாண்டியன் அவர்கள் நடுவராகவும், திருமதி பூமா சுந்தரராஜன், திரு. ரங்கராஜ், திரு.சாந்தாராம் சேத்,மற்றும் செல்வி யாமினி சேகர் ஆகியோர் பட்டி மன்றப் பேச்சாளர்களாகவும் பங்கேற்று நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள் |
| 12 | 23-12-23 | திருநெல்வேலியில் புயல் , மழை பாதிப்பு ஏற்பட்ட போது நிவாரணப் பணிக்கு உடைகள் தானியங்கள் போன்ற பொருட்களை திரட்ட சங்கத்தில் முகாம் வசதி செய்து கொடுக்கப்பட்டது. | 23-12-23 முதல் 27-12-23 வரை சங்கத்தில் இந்த முகாம் செயல்பட்டது |
| 13 | 7-1-24 | நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் 46வதுபொதுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டது | இந்த 46வது பொதுக்குழுக் கூட்டத்திற்கு திரு.பி.கோதண்டராமன் (ஆ.உ.எ.678) அவர்கள் தலைமை வகித்தார். |
| 14 | 10-1-24 | முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் திரு.என்.மகாதேவன் அவர்கள் மறைவுக்கு இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. | இதில் அமரர் திரு. என். மகாதேவன் அவர்களின் குடும்பத்தினரும் சங்க உறுப்பினர்களும் பங்கேற்று இரங்கல் தெரிவித்தார்கள் |

| வ. எண் | தேதி | நிகழ்வு | குறிப்பு |
|---|---|---|---|
| 15 | 12-1-24 | தமிழக அரசின் 'அயலகத் தமிழர் தினம்' நிகழ்வில் நமது சங்கம் இணையம் வழியாகப் பங்கேற்றது. | |
| 16 | 16-1-24 | திருவள்ளுவர் தின விழாவன்று புதிய இலக்கிய நிகழ்வான - **இணையத்தில் இலக்கியத் துளிகள்** நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டது | 'திருக்குறளில் நட்பு' என்ற தலைப்பில் கல்வியாளர் திருமதி அமலா ஸ்டான்லி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். |
| 17 | 26-1-24 | குடியரசு தின விழாக் கொடியேற்ற நிகழ்வு. | சங்க வளாகத்தில் குடியரசு தினக் கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. அறங்காவலர் குழுத் தலைவர் திரு.எஸ். ஏகாம்பரம் ஐயா அவர்கள் கொடியேற்றினார்கள். |
| 18 | 4-2-24 | உறுப்பினர்களது குடும்பத்தினரும் பொது மக்களும் பங்கேற்ற பொங்கல் விருந்து விழா நடைபெற்றது. இதில் சுமார் 1500 மக்கள் பங்கேற்றார்கள். | இவ்விழாவை நவி மும்பையின் முன்னாள் துணை மேயர் திரு. அவினாஷ் லாட் அவர்கள் துவங்கி வைத்துச் சிறப்பித்தார். |
| 19 | 9-3-24 | தமிழ் இணையக்கல்விக் கழகத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது | இந்த நிகழ்வில் மாணவர்களும் ஆசிரியைகளும் பெற்றோரும் பங்கேற்றார்கள் |
| 20. | 9-3-24 | சங்கத்தின் முத்திரை நிகழ்வான 'தமிழ் இசை ஆராதனை'விழா நடைபெற்றது | மும்பையின் பல்வேறு இசைப்பள்ளிகளின் மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியைகள் தமிழ் மூவரை வணங்கி தமிழ்ப் பாடல்களைப் பாடினார்கள் |
| 21 | 9-3-24 | அகில உலக மகளிர் தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. | இதில் அனைத்து மொழி பேசும் மகளிரும் பங்கேற்று மகிழ்ந்தார்கள். |
| 22 | 23-3-24 | ஆயக்குடி அமர் சேவா சங்கத்தின் செயலாளர் திரு. எஸ். சங்கர ராமன் அவர்களுக்குப் பாராட்டுவிழா நடைபெற்றது. கோபர்கைரனேவில் உள்ள சகயோகினி சன்ஸ்தா மாற்றுத் திறனாளிப் பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சியை வழங்கினார்கள். அந்த நிறுவனத்தின் பொறுப்பு அதிகாரிகளுக்கும் கௌரவிப்பு செய்யப்பட்டது. | நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். |

*(ஒப்பம்)*
*ராஜஸ்ரீ நாகராஜன்*
*தலைவர்*

*(ஒப்பம்)*
*மீனாட்சி வெங்கடேஷ்*
*செயலாளர்*